**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக்கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 3**

**இறுதிப்பரீட்சை – 2020/2021 ( நிகழ்நிலை)**

**சட்ட முறைமை – LLU3904/LWU1412**

**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

---

**திகதி : 8 செப்டெம்பர் 2021** **நேரம்: மு.ப 9.00 - பி.ப 12.30**

---

**வினாக்களின் எண்ணிக்கை – 06**

**பகுதி I மற்றும் பகுதி II ஆகியவற்றில் இருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து , நான்கு வினாக்களிற்கு விடையளிக்க.**

**தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

## பகுதி I – உரோமன் சட்டம்

1. மார்கஸ் எனும் உரோமப் பிரஜை பவுலினஸ் , நீரோ மற்றும் ஒரேலியா எனும் பெயர்களைக் கொண்ட இரு மகன்களையும் , ஒரு மகளையும் கொண்டிருந்தார். பவுலினஸ், போர்சியா எனும் மற்றுமொரு உரோமப் பிரஜையுடன் பல வருடங்கள் இணைந்து வாழ்ந்ததுடன் , அவர்களிற்கு இரு பிள்ளைகளும் இருந்தனர். ஒரேலியா , புருடஸ் என்பவனுடன் சுதந்திர திருமணத்தில் (Free marriage) இணைந்ததுடன் , அவர்களிற்கும் இரு பிள்ளைகள் இருந்தனர்.

மார்கஸினுடைய பின்வரும் செயல்களின் வலிதாந்தன்மையை ஆராய்க.

(அ) மார்கஸ் மற்றும் அவனது அயலவர் ரேமோனா ஆகியோர் சுமூகமான உறவைக் கொண்டிராததுடன் , மார்கஸ் அவனது குடும்பத்து உறுப்பினர்கள் ரேமோனாவின் தோட்டத்திற்குள் நுழைவதை கடுமையாக தடை செய்திருந்தான். ஒரு நாள் பவுலினஸினுடைய இரு பிள்ளைகளும் தமது செல்லப்பிராணியான முயலைத் தேடி ரேமோனாவின் தோட்டத்திற்குள் சென்றதுடன் , அங்கிருந்து வெளியே வரும் போது வாயிற்கதவை மூடுவதற்கு மறந்தனர் . ரேமோனாவின் சகல கால்நடைகளும் அங்கிருந்து தப்பித்து , தொலைந்தன. இச்சம்பவம் குறித்து மார்கஸ் கேள்வியுற்று , மிகக் கோபமடைந்ததுடன் , ஒரு பிள்ளையை மரணிக்கும் வண்ணம் தாக்கினான். அவன், தனக்கு நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் எனக் கோரிய ரேமோனாவிற்கு , அவனிற்கு ஏற்பட்ட இழப்பிற்கு நட்டயீடாக மற்றுமொரு பிள்ளையைக் கொடுத்தான்.

**(12 புள்ளிகள்)**

(ஆ) உரோமன் இராணுவத்தில் பணியாற்றியமைக்காக பவுலினஸ் , 1000 ஆரியஸ்களை (Aureus) சம்பாதித்தார். இப்பணத்தை பயன்படுத்தி அவர் அப்பிள் பழத்தோட்டம் ஒன்றை வாங்குவதற்கு எண்ணுகிறார். மார்கஸ் இதற்கு ஆட்சேபனை தெரிவிப்பதுடன் , அப்பணத்தைக் கொண்டு தன் குடும்பத்திற்கு ஒரு குதிரையையும் , ஒரு வண்டியையும் வாங்குவதற்கு கட்டளையிட்டான்.

**(07 புள்ளிகள்)**

(இ) நீரோ , ஒரு செல்வந்த நில பிரபுவான லோதாரியோ என்பவனின் ஒரே மகளான வீனஸ் என்பவளை திருமணம் செய்ய எண்ணுகிறான். நீரோ திருமணம் செய்வதற்கு ஒரு சில வருடங்கள் காத்திருக்க வேண்டும் என்றும் , அவன் மார்கஸ் முன்மொழியும் ஒருவரை திருமணம் செய்ய வேண்டும் என்றும் கூறி , மார்கஸ் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை.

**(06 புள்ளிகள்)**

2. டிடுஸ் என்பவனும் அவனது அடிமை சுல்லா என்பவனும் கோதுமை பொதி ஒன்றை விற்பனை செய்ய சந்தைக்குக் கொண்டுச் சென்றனர். அவர்கள் சந்தையைக் கடந்து செல்லும் போது , கஸ்கா என்பவனும் டரியஸ் என்பவனும் வழியை மறித்து , டிடுஸை அவமதித்ததுடன் , தடியால் இருவரையும் தாக்கினர். டிடுஸிற்கு சில எலும்புகள் முறிந்ததுடன் , சுல்லா தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக இறந்தான். கோதுமை பொதி சேதம் அடைந்ததுடன் , அது பாதையெங்கும் சிதறியது.

டிடுஸ் என்பவனின் நண்பன் ஒருவனான கய்ஸ் எனும் உயர் அதிகாரி , அவ்விடத்தை அடைந்ததுடன் , கஸ்கா , கய்ஸின் மீது கற்களை வீசினான்.

மேலுள்ள சந்தர்ப்பத்தில் இருந்து எழும் சட்ட சிக்கல்களை ஆராய்க.

**(25 புள்ளிகள்)**

3. பின்வரும் சந்தர்ப்பங்களில் இருந்து எழும் சட்ட விளைவுகளை விளக்குக.

(அ) ஜீலியன் என்பவனின் காணியின் மீது சகல நோக்கங்களிற்காகவும் அந்தனி என்பவனிற்கு ஒரு பொது பாதை உரிமை இருந்தது.

(ஆ) ஆகஸ்டஸ் என்பவனிற்கு உரித்துடைய வீட்டை உபயோகிக்கவும் , அனுபவிக்கவும் கிளவ்டியஸிற்கு ஒரு உரிமை காணப்பட்டு , கிளவ்டியஸ் , அவ் வீட்டை ஒரு பொழுதுபோக்கு நிலையமாக மாற்றினான்.

(இ) ஜீலியஸ் என்பவன் சில்வியஸ் என்பவனிற்கு கடன் ஒன்றிற்கான பிணையாக குதிரை ஒன்றைக் கொடுத்தான். அக்குதிரையானது சில்வியஸின் வீட்டில் இருந்த அடிமை ஒருவனை உதைத்துக் காயப்படுத்தியது.

(ஈ) டயனா என்பவளின் வீடு நெருப்பினால் சேதமாக்கப்பட்டமையால், பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக இயோனா என்பவளிடம் சில பெறுமதிமிக்க வைரம் பதித்த நகைகளைக் கையளித்தாள். இயோனா நகைகளை திருப்பியளிக்க மறுத்தாள்.

**(25 புள்ளிகள்)**

## பகுதி III – சட்டமுறைமை

4. திரு. சில்வா என்பவன் இலங்கை உயர்நீதிமன்றத்தின் குழாத்தின் முன்னிலையில் A ,B மற்றும் C ஆகிய தரவுகளை அடிப்படையாகக் கொண்ட வழக்கு ஒன்றை தற்போது வாதிடுகிறான்.

பின்வரும் தீர்ப்புகளின் பிரயோகத்தன்மை குறித்து திரு.செல்வாவிற்கு அறிவுறுத்துக. உமது கருத்தை பொருத்தமான எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிட்டு ஆதாரப்படுத்துக.

(அ) A, B மற்றும் C ஆகிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வழக்கில் இலங்கையின் உயர்நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழாமினால் 1989 இல் வழங்கப்பட்ட தீர்மானம்.

(ஆ) A மற்றும் B ஆகிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட 2020 இல் இந்திய உயர்நீதிமன்றத்தின் நிறைகுழாமினால் வழங்கப்பட்ட தீர்மானம்.

(இ) A, B ,C மற்றும் Dஆகிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வழக்கில் 1979 இல் கோமறைக் கழகத்தால் ( Privy Council) வழங்கப்பட்ட ஒரு தீர்மானம்.

(ஈ) A, B மற்றும் C ஆகிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வழக்கில் 1965 இல் இலங்கை உயர்நீதிமன்றத்தின் நிறைகுழாமினால் வழங்கப்பட்ட தீர்மானம்.

**(25 புள்ளிகள்)**

5. நாகேஸ்வரத்தில் உள்ள ஸ்ரீ நாகபவன் பிரசித்தமான ஒரு வணக்கத்தலம் ஆகும். வேறுபட்ட நம்பிக்கைகளைக் கொண்ட பக்தர்கள் ஆசிர்வாதத்திற்காக நாகபவனிற்கு சென்றனர். ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதத்தில் ஸ்ரீ நாகபவனின் உற்சவத்தில் கடவுள் ஸ்ரீ நாகாவின் பெயரில் ஆடுகளைப் பலியிடுதல் நடைபெறும். இவ்வருடத்தின் உற்சவத்தின் போது பலர் பல ஆடுகளை வளாகத்திற்கு கொண்டு வந்ததுடன் , கொடூரமான முறையில் அவற்றை திறந்த வெளியில் பலியிட்டனர். சகல ஆடுகளும் , விலங்கை பலி கொடுக்கும் நோக்கில் சிறப்பாக அமைக்கப்பட்ட ஒரு கொட்டகையில் வைக்கப்பட்டன. பலியிடப்பட்ட ஆடுகளின் சதையின் ஒரு பாகம் விற்கப்பட்டதுடன் , எஞ்சியவை வருடாந்த உற்சவத்திற்கு வருகை தந்த மக்களிற்கிடையே இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

'ஹித மிதுரோ' எனும் விலங்குகளிற்கான கொடூரத்தை தடுத்தல் மற்றும் பாதுகாத்தல் என்பனவற்றிற்காக சேவையாற்றும் அரச சார்பற்ற தாபனம் ஆனது , விலங்குகளிற்கான கொடூரத்தை தடுக்கும் சட்டத்தின் தடுக்கும் சட்டத்தின் உறுப்புரைகளை மீறியமைக்காக ஸ்ரீ நாகபவனின் அறங்காவலர் குழுவின் மீது வழக்கு ஒன்றை தாக்கல் செய்யத் தீர்மானித்தது. ஸ்ரீ நாகபவனின் அறங்காவலர் சபை அவர்களிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை உறுதியுடன் எதிர்ப்பதுடன் , ஆடுகளைப் பலியிடுதல் ஆனது 150 வருடங்களிற்கு மேலாக நிலைத்து வரும் மத வழக்கம் என்றும் , இதனால் இவ்வழக்கத்தை வருடந்தோறும் நிகழ்த்துவதற்கு இவர்களிற்கு ஒரு சட்ட உரிமை காணப்படுவதாகவும் வாதிட்டனர்.

ஸ்ரீ நாகபவனின் வழக்கத்தின் வலிதுடைமை குறித்து உமது அறிவுரையை 'ஹித மிதுரோ' நாடுகிறது. வலிதான வழக்காறு ஒன்றிற்கான தேவைப்பாடுகளை எடுத்து நோக்கி அவர்களிற்கு அறிவுறுத்துக. உமது விடையை பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களால் ஆதாரப்படுத்துக.

**(25 புள்ளிகள்)**

6. 2018 ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவில் ஒரு வாக்காளராக பதிவு செய்து கொண்ட குசல் என்பவன் , அதே வருடத்தில் மோட்டார் வாகன விபத்து ஒன்றில் இறந்தான். 2019 இல் ஒரு பொது தேர்தல் இடம்பெற்றதுடன் , 2018 இன் வாக்காளர் பதிவை அடிப்படையாகக் கொண்டு குசல் ஒரு வாக்காளராக பட்டியலிடப்பட்டுள்ளான். தேர்தல் தினம் அன்று ரஞ்சன் என்பவன் குசலினுடைய வாக்காளர் அட்டையுடன் வாக்களிப்பு நிலையத்திற்கு சென்று , குசல் போல அவனை பாவனை செய்து , வாக்கிட்டான். ரஞ்சன் தற்போது 'வாக்களிக்க உரித்துள்ள ஏதேனும் நபரை ஆள்மாறாட்டம் செய்தல் சட்ட விரோதமானது' என்றுரைக்கும் உறுப்புரைகளின் கீழ் ஆள்மாறாட்டக் குற்றம் சாட்டப்பட்டுள்ளான்'. வாக்களிக்க உரித்துள்ள நபர் ஒருவரை ஆள்மாறாட்டம் செய்தல் மட்டுமே சாத்தியமானது என்பதால் தான் குறித்த குற்றம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட இயலாது என்றும் , இறந்த நபர் வாக்களிக்க முடியாது என்றும் ரஞ்சன் வாதிட்டான்.

சட்டத்தின் ஊகங்கள் மற்றும் நியதிச்சட்ட பொருட்கோடல் என்பனவற்றை தொடர்புறுத்தி ரஞ்சனுடைய வாதத்தின் வலிதுடைமையை கணிக்க. உமது விடையை பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களால் ஆதாரப்படுத்துக.

**(25 புள்ளிகள்)**

*பதிப்புரிமை பெற்றது*